**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

**OS 132/2021**

12.06.2025

**வா.சா.1 சங்கர்கணேஷ் த/பெ. ராமச்சந்திரன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கானது பிரபாகரன் மீது எனக்கு பணம் தரவேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். பிரபாகரன் என்னிடம் ரூ 5 லட்சம் கடன் வாங்கியிருந்தார். பிரதிவாதி எனக்கு நான் பால்கடை வைத்திருந்ததால் கடைக்கு வருவார் அதனால் எனக்கு பழக்கம். கடை 2 ஆண்டுகளுக்கு முன்பு வரை நடத்தினேன். 2019 ல் நான் ஆரோக்கியா ஏஜெண்ட் என்ற அடிப்படையில் பால்கடை நடத்திவந்தேன் என்பதற்கான ஆதார் அட்டை ஒப்படைக்கமுடியுமா என்றால் கடையை நான் நடித்தினேன் அதற்கான ஏஜெண்ட் என் மாமா பெயரில் இருந்தது. என் மாமாவை அவர் அரோக்கியா பால் ஏஜெண்ட் என்ற முறையில் கடை நடத்தி வந்தார் என்பதை நிருபிக்க அவரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் எந்த பால்வியாபாரமும் செய்யவில்லை என்றாலும் பிரதிவாதியை யார் என்றே எனக்கு தெரியாது என்றும் பொய்யாக ஒரு புரோநோட்டை தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்தபோது என் சொந்தஊர் பாண்டுகுடியில் இருந்தேன் தற்போதும் அங்குதான் உள்ளேன். அந்த வீடு எனக்கு சொந்தமான ஓட்டுவீடாகும். 1000 சதுர அடியில் ஓட்டுவீடாகும். சொந்தமாக விவசாய நிலம் எனக்கு இல்லை. தற்போது பால்வியாபாரம் செய்யவில்லை. நான் கூத்தாநல்லூர் IOB ல் வங்கி கணக்கு வைத்துள்ளேன். சுமார் 15 ஆண்டுகாலமாக அந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். என்னுடை வங்கி கணக்கில் பணம் போடுவதில் என் மனைவியிடம் G pay வசதி உள்ளதால் என் மனைவி பெயருக்கு தான் பணம் போடுவேன். 2018 , 2019 ஆண்டுகளில் என் வங்கி கணக்கில் நான் எந்த பணபரிமாற்றமும் செய்யவில்லை. எனக்கு Pan card உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். என்னுடைய IOB வங்கி பாஸ்புக் மற்றும் 2018 - 2019 , 2019 – 2020 ஆகிய ஆண்டுகளுக்கு உரிய வருமானவரி கணக்கு என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும். அதேபோல் 2018 முதல் 2020 ஆண்டுகளுக்குரிய என் வங்கி கணக்கில் ஏற்பட்ட பணபரிமாற்றத்தை காட்டுவதற்கான ஆவணமும் என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். என் மனைவி பெயர் மங்கையர்கரசி அவர் வீட்டுக்குடித்தனம் அவருக்கு எந்த வருமானம் இல்லை. என் மனைவியின் 2018 – 2019 , 2019 – 2020 ஆண்டுகளுக்கான வங்கி கணக்கு பரிமாற்றம் தொடர்பான ஆவணங்களை வழக்கில் தாக்கல்செய்ய முடியுமா என்றால் முடியும். 2018 , 2019 ல் என் வேலைபார்த்தேன் என்றால் என் மாமாவின் பால்கடையை பார்த்துகொண்டேன். அந்த கடையை பார்த்த வகையில் எவ்வளவு வருமானம் வந்து

என்றால் ரூ. 30,000/- வந்தது. அந்த பணத்தை குடும்பசெல்விற்காக என் மனைவியிடம் கொடுப்பேன். எனக்கு 2 குழந்தைகள் மூத்தகுழந்தைக்கு 8 வயது , இரண்டாவது குழந்தைக்கு 4 வயதாகிறது. எனக்கு குடும்பசெலவிற்கு மாதம் ரூ. 15,000/- வரை செலவாகும். பால்கடை தொழிலுக்கு பின்பு தற்போது எலக்ரிஷியனாக இருக்கிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.